

புதிய கோவை மாஸ்டர் பிளான்–2041–க்கு ஒப்புதல் வழங்கியதற்கு கோவை கிரெடாய் நிர்வாகிகள் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவித்த போது எடுத்தபடம்.

# முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

சென்னை, ஜூலை.8–

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமை செயலகத்தில் 'கிரடாய்' கோவை தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த்குமார், துணை தலைவர் ராஜீவ் ராமசாமி, பொருளாளர் கார்த்திக்குமார் ஆகியோர் சந்தித்து பேசினர். அப்போது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில் கோவை உள்ளூர் திட்டப்பகுதிகளின் 2–வது முழுமை திட்டத்தை வெளியிட்டதற்கும், அரசு அலுவல் நடைமுறைகளில் ஒப்புதல் பெறும் நடவடிக்கைகளை எளிமைப்படுத்தியதற்கும், தமிழ்நாட்டில் முதல்முறையாக இணையதளம் வாயிலாக சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2 ஆயிரத்து 500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3 ஆயிரத்து 500 சதுர அடி அளவுக்கு கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடி ஒப்புதல் பெறும் சுயசான்றிதழ் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியதற்காகவும் நன்றி தெரிவித்தனர்.

இந்த சந்திப்பின்போது அமைச்சர் முத்துசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமை செயலாளர் காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குனர் கணேசன், தமிழகத்தின் 'கிரடாய்' தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன் இளங்கோ உள்பட பலர் உடனிருந்தனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி



சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் கீழ் செயல்படும் **நகர்** ஊரமைப்பு இயக்கத்தின் சார்பில் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப்பகுதியின் இரண்டாவது முழுமைத்திட்டத்தை வெளியிட்டதற்காக கிரடாய் கோயம்புத்தூர் **தலைவர்** எஸ்.ஆர்.அரவிந்த் குமார், துணைத் தலைவர் ராஜீவ் ராமசாமி, **பொருளாளர்** பி.கார்த்திக் குமார், உறுப்பினர் ஆர்.சந்திரமவுலி, பொதுமேலாளர் என்.கே.பாலச்சந்திரன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன், அமைச்சர் முத்துசாமி, கூடுதல் தலைமைச் **செயலாளர்** காகர்லா **உஷா,** ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், தமிழ்நாடு கிரடாய் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள குகன் இளங்கோ, தற்போதைய தலைவர் டபிள்யூ.எஸ்.ஹபீப், இணைச்செயலாளர் வி.சதாசிவம், கிரடாய் தேசிய செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதரன் உள்ளிட்டோர்.



# 'புதிய கோவை மாஸ்டர் பிளான் 2041'க்கு அரசு ஒப்புதல்: முதல்வருக்கு கோவை கிரடாய் நிர்வாகிகள் நேரில் நன்றி

கோவை, ஜூலை 8–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில் சந்தித்து, கோவை உள்ளூர் திட்டப் பகுதியின் இரண்டாவது முழுமைத் திட்டத்தை வெளியிட்டதற்கு கிரடாய் கோவை அமைப்பு நிர்வாகிகள் நன்றி தெரிவித்தனர்.

சமீபத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்பு இயக்கத்தின் சார்பில், கோவை உள்ளூர் திட்டப் பகுதியின் இரண்டாவது முழுமைத் திட்டம் வெளியிடப்பட்டது.

அரசு அலுவல் நடைமுறைகளில் ஒப்புதல் பெறும் நடவடிக்கைகளை எளிமைப்படுத்தி, தமிழ்நாட்டில் முதல் முறையாக இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடி ஒப்புதல் பெறும் சுயசான்றிதழ் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியுள்ளது.

இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை கிரடாய் கோவை தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த் குமார், துணைத்தலைவர் ராஜீவ் ராமசாமி, பொருளாளர் பி.கார்த்திக் குமார், உறுப்பினர் ஆர்.சந்திரமௌலி, தமிழ்நாட்டின் கிரடாய் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன் இளங்கோ, பொது மேலாளர் என். கே.பாலச்சந்திரன் மற்றும் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இது குறித்து கிரடாய் கோவை தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த் குமார், அவர் வெளியிட்ட அறிக்கையில், புதிய மாஸ்டர் பிளானுக்காக 30 ஆண்டு காலம் கோவை மக்கள் காத்திருந்ததாகவும், அதனை தற்போது முதலமைச்சர் வெளியிட்டிருப்பது மிக்க மகிழ்ச்சி அளிப்பதாகவும் தெரிவித்தார்.

கோவை மாஸ்டர் பிளான் 2041 எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு, நுணுக்கமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனால் கோவையில் அடுத்த 16 ஆண்டுகளில் ரூ.25,000 கோடி அளவிற்கு முதலீடுகள் மற்றும் மெட்ரோ ரெயில் திட்டத்தின் மூலம் ரூ.35,000 கோடி முதலீடு செய்யப்படும். இதனால் கோவைப் பகுதி பெரும் வளர்ச்சியைக் காண உள்ளது என்றார்.

இந்நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், தமிழ்நாட்டின் கிரடாய் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன் இளங்கோ மற்றும் கிரடாய் சென்னை நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

09

2025 ജൂലൈ
ബുധൻ
1200 മിഥുനം 25

# ദീപിക

DEEPIKA, THE FIRST MALAYALAM DAILY ESTABLISHED 1887

തൃശൂർ
പേജ് 12
വില ₹ 9.00

THRISSUR
WEDNESDAY
JULY 2025
PAGE 12 PRICE 9.00

VOL.40 NO.185

Printed at Kottayam • Thrissur • Kochi • Kannur • Kozhikode • Thiruvananthapuram





:കോയമ്പത്തൂർ മാസ്റ്റർപ്ലാൻ അംഗീകരിച്ച മുഖ്യമന്ത്രി എം.കെ. സ്റ്റാലിനെ ക്രഡായ് കോയമ്പത്തൂർ പ്രസിഡന്റ് അരവിന്ദ് കുമാർ, വൈസ് പ്രസിഡന്റ് രാജീവ് രാമസാമി, ട്രഷറർ കാർത്തിക് കുചന്ദ്രമൗലി, കുഗൻ ഇളങ്കോ, ജന ·റൽ മാനേജർ ബാലചന്ദ്രൻ തുടങ്ങിയവർ സന്ദർശിച്ച് നന്ദി അറിയിക്കുന്നു. അടുത്ത 16 വർഷത്തിനുള്ളിൽ കോ യമ്പത്തൂരിൽ 25,000 കോടി രൂപയുടെ നിക്ഷേപവും മെട്രോ റെയിൽ പദ്ധതിയിലൂടെ 35,000 കോടി രൂപയുടെ നിക്ഷേപവുമാണ് മാസ്റ്റർപ്ലാനിലൂടെ ലക്ഷ്യമിടുന്നത്.

# ‘கிரெடாய்’ நிர்வாகிகள் முதல்வருக்கு நன்றி



கோவை மாஸ்டர் பிளான் 2041க்கு, ஒப்புதல் வழங்கியதற்காக முதல்வர் ஸ்டாலினை தலைமை செயலகத்தில் சந்தித்து, கோவை கிரெடாய் நிர்வாகிகள் நன்றி தெரிவித்தனர்.

**கோவை, ஜூலை 10 –**

கிரெடாய் அமைப்பின் கோவை நிர்வாகிகள், தமிழக முதல்வர் ஸ்டாலினை தலைமை செயலகத்தில் சந்தித்து, கோவை மாஸ்டர் பிளான் உள்ளூர் திட்டப் பகுதியின் இரண்டாவது முழுமைத் திட்டத்தை வெளியிட்டதற்கு, நன்றி தெரிவித்தனர்.

கிரெடாய் கோவை தலைவர் அரவிந்த் குமார், துணைத் தலைவர் ராஜீவ் ராமசாமி, பொருளாளர் கார்த்திக் குமார், உறுப்பினர் சந்திரமவுலி, தமிழ்நாட்டின் கிரெடாய் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன் இளங்கோ, பொது மேலாளர் பாலச்சந்திரன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

கிரெடாய் கோவை தலைவர் அரவிந்த் குமார் கூறுகையில், ‘‘கோவை மாஸ்டர் பிளான் 2041, எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு, நுணுக்கமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் கோவையில் அடுத்த 16 ஆண்டுகளில், ரூ. 25,000 கோடி அளவிற்கு முதலீடுகள் மற்றும் மெட்ரோ ரயில் திட்டத்தின் வாயிலாக, ரூ.35,000 கோடி முதலீடு செய்யப்படும். இதனால் கோவைப் பகுதி பெரும் வளர்ச்சியைக் காண உள்ளது,’’என்றார்.

## கோவை மாஸ்டர் பிளானுக்கு ஒப்புதல்:

# தமிழக முதல்வருக்கு கிரெடாய் நிர்வாகிகள் நன்றி!

கோவைஜூலை.10

கிரெடாய் அமைப்பின் கோவை நிர்வாகிகள், தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமை செயலகத்தில் சந்தித்து,

கோவை மாஸ்டர் பிளான் உள்ளூர் திட்டப் பகுதியின் 2 வது முழுமைத்திட்டத்தை வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்தனர்.

கிரெடாய் கோவை தலைவர் அரவிந்த்குமார், துணைத் தலைவர் ராஜீவ் ராமசாமி, பொருளாளர் கார்த்திக்குமார், உறுப்பினர் சந்திரமவுலில தமிழ்நாட்டின் கிரெடாய் தலைவராக தெர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன்இளங்கோ, பொது மேலாளர் பாலச்ந்திரன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்,

இது குறித்து கிரெடாய் கோவை தலைவர் அரவிந்த்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது;

கோவை மாஸ்டர்பிளான் 2041, எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு , நுணுக்கமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது, இதனால் கோவையில் அடுத்த 16 ஆண்டுகளல் ரூ. 25 ஆயிரம் கோடி அளவிற்கு முத வீடுகள் மற்றும் மெட்ரோ ரெயில்திட்டத்தின்வாயிலாக, ரூ. 35 ஆயிரம் கோடி முதலீடு செய்யப்படும்,

இதனால் கோவைப்பகுதி பெரும் வளர்ச்சியைக் காண உள்ளது இவ்வாறு அவர் கூறினார்.




The Chief Minister Mr. M.K. Stalin holding a review meeting with officials at the Secretariat, on behalf of the Directorate of Town and Country Planning under the Department of Housing and Urban Development on Monday. Many top officials attended the meeting.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், கோவை உள்ளூர் திட்டப்பகுதியின் இரண்டாவது முழுமைத்திட்டத்தை வெளியிட்டதற்கும், அரசு அலுவல் நடைமுறைகளில் ஒப்புதல் பெறும் நடவடிக்கைகளை எளிமைப்படுத்தியதற்கும், தமிழ்நாட்டில் முதல் முறையாக இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடி ஒப்புதல் பெறும் சுயசான்றிதழ் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியதற்கும், கிரடாய் கோவை தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த் குமார், துணைத்தலைவர் ராஜீவ் ராமசாமி, பொருளாளர் கார்த்திக்குமார், உறுப்பினர் சந்திரமௌலி, பொது மேலாளர் என்.கே.பாலச்சந்திரன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், தமிழ்நாட்டின் கிரடாய் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன் இளங்கோ, தற்போதைய தலைவர் டபிள்யூ.எஸ்.ஹபீப், இணை செயலாளர் வி.சதாசிவம், கிரடாய் தேசிய செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதரன், இணை செயலாளர் சுரேஷ் கிருஷ்ணா, கிரடாய் சென்னை தலைவர் மொகமது அலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



A team of CREDAI Office Bearers including S.R. Arvind Kumar, President, Rajiv Ramasamy, Vice President, P. Karthik Kumar, Treasurer, R. Chandramouli, Member, Gugan Illango, President elect CREDAI Tamil Nadu, General Manager N.K. Balachandran met the Honorable Tamil Nadu Chief Minister at the Secretariat yesterday and expressed their sincere thanks for the release of Coimbatore Master Plan - 2041.

# Coimbatore CREDAI delegation thank CM for Coimbatore Master Plan-2041

**Coimbatore, July 8:** A delegation of office-bearers of CREDAI Coimbatore met the Chief Minister M.K. Stalin, at the Secretariat on 7.7.2025 and thanked him for releasing Coimbatore Master Plan - 2041. Recently, the Tamil Nadu Housing and Urban Development Department released the Coimbatore Master Plan 2041. The Government has also simplified the procedures for getting approval.

Tamil Nadu for the first time has introduced and implemented a self-certification scheme for getting online approval for residential construction up to 3,500 square feet on a plot of land with an area of maximum 2,500 square feet. This has considerably simplified the procedure and has benefited the common man. A team of CREDAI led by S.R. Arvind Kumar, President, Rajiv Ramasamy, Vice President, P. Karthik Kumar Treasurer, R. Chandramouli, Member, Gugan Illango, President elect CREDAI Tamil Nadu and N.K. Balachandran, General Manager met him and expressed their sincere thanks.

S.R. Arvind Kumar, President, CREDAI, Coimbatore in a statement said that the people of Coimbatore had been waiting for 30 years for the new Master Plan and they are extremely glad that the Chief Minister has now released it. The Coimbatore Master Plan has been prepared in a meticulous manner keeping in mind the future development. Due to this, investments of Rs. 25,000 crores will be made in Coimbatore in the next 16 years and Rs. 35,000 crores will be invested through the Metro Rail project. Due to this, the Coimbatore region is going to witness rapid development.

Also present were State Housing Minister S. Muthusamy, Additional Chief Secretary, Housing and Urban Development Kakarla Usha, Director, Town and Country Planning P. Ganesan and other government officials.

# வெளியானது மாஸ்டர் பிளான்: செய்ய வேண்டியது என்ன?

கு.தங்கராஜா

எதிர்காலத்தில் ஒரு மாநகருக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் தேவைப்படும், எதிர்காலத்தில் பெருக இருக்கும் மக்கள் தொகைக்கு ஏற்ப அவை எந்த அளவுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும், அந்த நகரின் சமூக, பொருளாதார உள்கட்டமைப்பு எப்படி அமைய வேண்டும் என்பதை விளக்கும் படங்கள், வரைபடங்கள் மூலமாக விளக்கும் அறிக்கைதான் 'மாஸ்டர் பிளான்' எனப்படும் முழுமைத் திட்டமாகும்.

ஒரு நகரம் கடந்த சுமார் 20 ஆண்டுகளில் எத்தகைய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதைக் கணக்கிட்டு, அடுத்த 20 ஆண்டுகளில் அது எத்தகைய வளர்ச்சியைப் பெறும் என்பதைக் கணக்கிடுவதாக அமையும்.

தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டம் 1971 இன் அடிப்படையில் 'மாஸ்டர் பிளான்' எனப்படும் முழுமைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாஸ்டர் பிளானும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்படும். கோவையில் கடைசியாக கடந்த 1994-ஆம் ஆண்டில் அப்போதைய அரசால் மாஸ்டர் பிளான் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

கோவையின் மக்கள் தொகை சுமார் 14.35 லட்சமாக இருந்த அந்த காலகட்டத்தில் கொண்டுவரப்பட்ட மாஸ்டர் பிளான், 1,287 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டிருந்தது. இடைப்பட்ட 30 ஆண்டுகளில் மாநகரம் மிகப் பெரிய அளவில் விரிவடைந்திருக்கிறது.

30 ஆண்டுகளில் மக்கள் தொகை மூன்று மடங்கு அதிகரித்து, தமிழகத்தில் மூன்றாவது பெரிய நகராக இருந்த கோவை, தற்போது இரண்டாவது பெரிய நகராக வளர்ந்துள்ளது. அப்போது விளைநிலங்களாக இருந்த பெரும்பாலான பகுதிகள் தற்போது குடியிருப்புகள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட பயன்பாட்டுப் பகுதிகளாக மாறியுள்ளன.

கோவையின் நான்கு புறமும் சுமார் 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு கிராமங்களாக இருந்த பகுதிகள் தற்போது மாநகரின் அங்கங்களாக மாறியிருக்கின்றன. புறநகர்ப் பகுதிகளுடன் பின்னிப் பிணைந்து அவையும் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அடுத்த ஆண்டு அரசு வெளியிட்ட அறிவிப்பின்படி இணைக்கப்படும் பகுதிகளையும் சேர்த்தால் நகரின் பரப்பளவு இன்னும் கூடுதலாகும்.

கோவைக்கு புதிய மாஸ்டர் பிளான் அமைக்கப்படும் என்று திமுக கடந்த சட்டப் பேரவைத் தேர்தலின் வாக்குறுதியாக அளித்திருந்தது. இதையடுத்து அரசு, தனியார் நிறுவனங்கள் இதற்கான ஆய்வுகளில் ஈடுபட்டு வந்த நிலையில், கடந்த பிப்ரவரியில் முன்வரைவு மாஸ்டர் பிளான் வரைவு வெளியிடப்பட்டது. அதன் மீதான ஆலோசனைகள், ஆட்சேபனைகள் பெறப்பட்டன.

இதையடுத்து, திருத்தங்களுடன் கூடிய 40-க்கும் மேற்பட்ட துறைகளின் ஆலோசனையின் பேரில் இறுதி செய்யப்பட்ட மாஸ்டர் பிளானை முதல்வர் மு.க.ஸ்டாலின் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

விரிவாக்கம் செய்யப்பட்ட கோவை மாநகராட்சியுடன் மதுக்கரை, கருமத்தம்பட்டி, காரமடை ஆகிய 4 நகராட்சிகள், 21 பேரூராட்சிகள், 66 கிராமங்களையும் உள்ளடக்கி 1,531 சதுர கி.மீ. பரப்பளவு பகுதிகள் கோவை திட்டப் பகுதிக்குள் கொண்டு வரப்பட்டு, கோவை மாஸ்டர் பிளான் 2041 தயாரிக்கப்பட்டுள்ளது.

முழுமைத் திட்டத்தின்படி கோவையின் மக்கள் தொகை 31.62 லட்சத்தில் இருந்து (2021 கணக்கீடு) 2041 ஆம் ஆண்டில் 58.24 லட்சமாக உயரும். புதிய மாஸ்டர் பிளானில் இதை ஒட்டிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் நிறைவேற்றும்.

வீட்டு வசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவது உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள மாஸ்டர் பிளானை நிறைவேற்றுவது குறித்து கோவையின் முக்கிய அமைப்புகள் கூறுவதைக் காண்போம்.



பருந்துப் பார்வையில் கோவை மாநகரம்.

**வரப்பிரசாதமாகி இருக்கும் மாஸ்டர் பிளான்:** கோவையில் சுமார் இடைவெளியில் மாஸ்டர் பிளான் புதுப்பிக்கப்படாததால் கட்டுமானத் தொழில் முனைவோர் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர். கோவை மாநகரப் பகுதிக்குள்ளேயே லேஅவுட் நிலங்கள் இருக்கின்றன. அவற்றை வகை மாற்றம் செய்வது மிகப்பெரிய சிக்கலாக இருந்தது. தொழிற்சாலைகள் விரிவாக்கம் செய்ய முனைந்தாலும் நில வகைமாற்றம் செய்வது சிக்கலான நடைமுறையாக இருந்தது. இதனால் திட்ட அனுமதி கிடைக்காமல் தடுமாறி வந்தோம். இந்நிலையில், மாஸ்டர் பிளான் அங்கீகாரம் வரப்பிரசாதமாக மாறியிருக்கிறது என்கிறார் கிரெடாய் அமைப்பின் கோவை தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த் குமார்.



எஸ்.ஆர். அரவிந்த் குமார்.

கோவைக்கான மாஸ்டர் பிளான் திட்டத்தின் மூலம் சென்னையில் ஏற்படும் நெரிசலான நிலை கோவைக்கு ஏற்படுவது தவிர்க்கப்படும். கோவைக்கு ஒருங்கிணைந்த வளர்ச்சி ஏற்படும். கோவையை சுற்றியுள்ள 60 சதவீத நிலங்கள் விவசாய நிலங்களாகவே உள்ளன. அவை மாஸ்டர் பிளானில் 33 சதவீதமாக மாற்றப்படுவதன் மூலம் எஞ்சிய விவசாய நிலங்களைத் தொழில் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு பயன்படுத்த முடியும்.

கோவையைச் சுற்றிலும் சுற்றுச் சாலை, குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு மட்டும் சுமார் ரூ.25 ஆயிரம் கோடி நிதி கிடைக்கும். அதுபோல் மெட்ரோ திட்டத்துக்கு சுமார் ரூ.35 ஆயிரம் கோடி வரக்கூடும். மாஸ்டர் பிளான் திட்டத்தின் மூலம் ரியல் எஸ்டேட் உள்ளிட்டவற்றுக்கு 30 நாள்களுக்குள் தடையில்லாச் சான்று கிடைக்கும்.

அதேநேரம், மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டி உள்ள சில கிராமங்கள் மலைப் பகுதிகள் பாதுகாப்பு ஆணையத்தின் (ஹாக்கா) கட்டுப்பாட்டுக்குள் வருகின்றன. இதனால், அந்தப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுவது பாதிக்கப்படலாம். இது தொடர்பாக பரிசீலிப்பது அவசியம் என்றார்.

**தவறுகளை சரிசெய்யும் வசதி வேண்டும்:** கோவை மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகி இருக்கிறது. இந்தத் திட்டத்தால் கோவை விரைவான வளர்ச்சி பெறும். போக்குவரத்து வசதிகள் மேம்படுவதுடன் தொழில் துறை முதலீடுகள் பெருகுவதுடன் கட்டமைப்பு வசதிகள் மேம்படும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.



ஜெ.சதீஷ்

இதற்காக இந்தத் திட்ட அறிக்கையில் பல்வேறு பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. அதேநேரம், அறிக்கையில் சில இடங்கள் மாறியாக அவை குடியிருப்பு பகுதியா, இல்லை வணிக பயன்பாட்டுக்கானதா என்ற விவரத்தை அறிவித்திருக்கின்றனர். இவை சரியாகத்தான் இருக்கிறதா என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சரிபார்த்து, அதில் தவறு இருந்தால் உடனடியாக சரிசெய்ய வேண்டும்.

சரிசெய்வதற்கு சென்னைக்குத்தான் செல்ல வேண்டும் என்று இல்லாமல் உள்ளூரிலேயே தவறை சரிசெய்வதற்கான அமைப்பை உருவாக்க வேண்டும் என்கிறார் காக்ஸ் அமைப்பின் இணைச் செயலர் ஜெ.சதீஷ்.

**மக்களின் பங்களிப்புடன் நிறைவேற்ற வேண்டும்:** 1930-களில் கோவைக்கு பைக்காரா நீர் மின் திட்டத்தில் இருந்து மின்சாரம் கிடைத்த காலத்தில் இருந்து கோவையின் வளர்ச்சி தொடங்கியது. அதைத் தொடர்ந்து பெருஞ்சாலைகள், ஆறு சாலைகள் கோவையின் தொழில் வளர்ச்சிக்கான முதுகெலும்பாக இருக்கின்றன. புதிய மாஸ்டர் பிளான் வரவேற்கத்தக்கது. ஆனால், பழைய பிளானில் இருந்த 130 க்கும் மேற்பட்ட திட்டச் சாலைகள் கைவிடப்பட்டுள்ளன.



சி.எம்.ஜெயராமன்.

அரசுகளைப் பொறுத்தவரை திட்டங்களை சரியாகப் போடுகின்றன. ஆனால், செயல்பாடுதான் சரியில்லை. அதற்கு ஒரு சிறந்த உதாரணமாக சூயஸ் திட்டத்தைக் கூறலாம் என்கிறார் கோவை சிட்டிசன்ஸ் வாய்ஸ் அமைப்பின் தலைவர் சி.எம்.ஜெயராமன்.

சூயஸ் திட்டம் வந்துவிட்டால் 24 மணி நேரமும் குடிநீர் கிடைக்கும், ஒரு சொட்டு நீர் கூட வீணாகாது என்றனர்.

ஆனால், 7 மணி நேரம் கூட குடிநீர் கிடைப்பதில்லை. பல இடங்களில் குழாய்கள் உடைந்து சாலைகளில் நீர் வீணாகிறது. இந்தத் திட்டத்துக்காக தோண்டிய பல சாலைகள் சீரமைக்கப்படாமல் அப்படியே கிடக்கின்றன.

கோவை மாநகரின் முக்கிய பகுதிகளாக உள்ள கணபதி, ஆவாரம்பாளையம், குறிச்சி, பீளமேடு, விளாங்குறிச்சி உள்ளிட்ட பல பகுதிகளில் ஆயிரக்கணக்கான தொழிற்கூடங்கள் செயல்படுகின்றன.

தில்லியில் செய்ததைப்போல இந்த தொழில் நிறுவனங்களைப் புறநகருக்கு கொண்டு செல்வது குறித்து சிந்திக்க வேண்டும். துணை நகர திட்டங்களை ஏற்கெனவே செயல்படுத்தியிருந்தால் ரங்கே கவுடர் வீதி உள்ளிட்ட இடங்களில் நெரிசல் பிரச்னைக்குத் தீர்வு கண்டிருக்கலாம்.

மாஸ்டர் பிளான் 2041 சரியாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் மக்களின் பங்களிப்பு அவசியம் தேவை. மாநகரில் உள்ள தொழில் அமைப்புகள், பொது மக்கள், தொழிலாளர்கள் உள்ளிட்டோரை ஒருங்கிணைத்து கூட்டம் நடத்தி, இணையவழியில் கருத்து கேட்டு செயல்படுத்தத் தொடங்க வேண்டும். மாஸ்டர் பிளான் 2041 எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைப்போல [illegible] பார்க்க வேண்டும் என்றார்.

## மாஸ்டர் பிளானில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சில திட்டங்கள்

கோவை மாநகரையொட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் வகையிலும் புறவழிச் சாலை.

மேற்கு புறவழிச் சாலையுடன் நரசிம்மநாயக்கன்பாளையம் – காரணம்பேட்டை கிழக்கு புறவழிச் சாலை, மதுக்கரை – செலக்கரிச்சல் தெற்கு புறவழிச் சாலை.

பீளமேடு, போத்தனூர், இருகூர் ரயில் நிலையங்கள் மேம்பாடு.

அத்துடன் சத்தியமங்கலம், திருச்சி சாலைகளை அகலப்படுத்துதல்.

கோவையில் ஏற்கெனவே அவிநாசி சாலை, சத்தி சாலையில் மெட்ரோ செயல்படுத்த திட்ட அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில், மாஸ்டர் பிளானில் மேலும் 5 வழித்தடங்கள் பரிசீலனை.

கோவையில் சுமார் 150 கி.மீ. தொலைவுக்கு பொதுப் போக்குவரத்து திட்டம் செயல்படுத்தப்படும். நீலாம்பூர், செட்டிபாளையம் உள்ளிட்ட இடங்களில் பேருந்து முனையங்கள், வடவள்ளி, மதுக்கரை உள்ளிட்ட 5 இடங்களில் மாநகர பேருந்து நிலையங்கள் அமைத்தல்.

செட்டிபாளையம், இருகூர், ராசிபாளையம் பகுதிகளில் பன்முக லாஜிஸ்டிக் பார்க்.

கருமத்தம்பட்டி, மதுக்கரை, சூலூர், மலுமிச்சம்பட்டி, கோவில்பாளையம் உள்ளிட்ட இடங்களில் சரக்கு முனையங்கள்.

மாநகரில் தற்போது தினசரி சுமார் 1,400 டன் குப்பைகள் சேகரிக்கப்படும் நிலையில், இது 2041இல் 2,620 டன்களாக அதிகரிக்கும். இவற்றைக் கையாளுவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

கோவையின் மின்சார தேவை 1,528 மெகாவாட்டில் இருந்து 6,262 மெகாவாட்டாக உயரும். அதற்கேற்ப துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.

கோவை மாவட்டத்திலும் மாவட்டத்தையொட்டியும் ஏராளமான சுற்றுலாத் தலங்கள் இருக்கும் நிலையில் கோவை மாவட்டத்துக்கு ஆண்டுக்கு சுமார் 77 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை 2041இல் 4 மடங்காக உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் மாவட்டத்தில் தற்போது சுமார் 3 ஆயிரம் ஹோட்டல்களே இருக்கும் நிலையில், இந்த எண்ணிக்கை 2041 இல் 12 ஆயிரமாக உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

# Coimbatore CREDAI Team thanks Tamil Nadu CM in person for Release of Coimbatore Master Plan-2041



THE KOVAI HERALD

Office Bearers of CREDAI Coimbatore met the Chief Minister of Tamil Nadu, M.K. Stalin, and thanked him for releasing the Coimbatore Master Plan - 2041.

A team of CREDAI Office Bearers including S.R. Arvind Kumar, President, Rajiv Ramasamy, Vice President, P. Karthik Kumar Treasurer, R. Chandramouli, Member, Gugan Illango, President elect CREDAI Tamil Nadu and N.K. Balachandran, General Manager met the Tamil Nadu Chief Minister and expressed their sincere thanks.

The event was attended by S. Muthusamy, the Minister of Housing and Urban Development, Prohibition and Excise, Kakarla Usha, Additional Chief Secretary, Housing and Urban Development, P. Ganesan, I.A.S., Director, Town and Country Planning, Office Bearers from Credai Chennai and other government officials.

கோவை மாஸ்டர் பிளான்

# முதல்வருக்கு கிரடாய் அமைப்பு நிர்வாகிகள் நன்றி



கிரடாய் கோயம்புத்தூர் அமைப்பு நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சரை சந்தித்து நன்றி தெரிவிக்கின்றனர்.

✍ நீ கோவை மெயில்

தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினை, கிரடாய் கோவை அமைப்பு நிர்வாகிகள், சந்தித்து கோவை உள்ளூர் திட்டப் பகுதியின் இரண்டாவது முழுமைத் திட்டத்தை வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்தனர்.

சமீபத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் நகர் ஊரமைப்பு இயக்கத்தின் சார்பில், கோவை உள்ளூர் திட்டப் பகுதியின் இரண்டாவது முழுமைத் திட்டம் வெளியிடப்பட்டது.

அரசு அலுவல் நடைமுறைகளில் ஒப்புதல் பெறும் நடவடிக்கைகளை எளிமைப்படுத்தி, தமிழ்நாட்டில் முதல் முறையாக இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடி ஒப்புதல் பெறும் சுயசான்றிதழ் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியுள்ளது.

இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினை, கிரடாய் கோயம்புத்தூர் தலைவர் அரவிந்த் குமார், துணைத் தலைவர் ராஜீவ் ராமசாமி, பொருளாளர் கார்த்திக் குமார், உறுப்பினர் சந்திரமௌலி, தமிழ்நாட்டின் கிரடாய் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குகன் இளங்கோ, பொது மேலாளர் பாலசந்திரன் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இதுகுறித்து கிரடாய் கோவை தலைவர் அரவிந்த் குமார் வெளியிட்ட அறிக்கையில், புதிய மாஸ்டர் பிளானுக்காக 30 ஆண்டு காலம் கோவை மக்கள் காத்திருந்தனர்.

அதனை தற்போது முதலமைச்சர் வெளியிட்டிருப்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

கோவை மாஸ்டர் பிளான் 2041 எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு, நுணுக்கமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் கோவையில் அடுத்த 16 ஆண்டுகளில் ரூ. 25,000 கோடி அளவிற்கு முதலீடுகள் மற்றும் மெட்ரோ ரயில் திட்டத்தின் மூலம் ரூ. 35,000 கோடி முதலீடு செய்யப்படும். இதனால் கோவைப் பகுதி பெரும் வளர்ச்சியைக் காண உள்ளது என்றார்.




# CREDAI's property expo 'FAIRPRO 2025' begins on Aug 8

**Coimbatore, Aug 5:** CREDAI Coimbatore brings you the 15th Edition of Coimbatore's biggest Property Expo, 'FAIRPRO2025'. This Festival of Home Buyers will be held on 8th, 9th and 10th August 2025 at CODISSIA Hall E., Coimbatore

Arvind Kumar S.R., President, Credai Coimbatore stated that Home Buyers in Coimbatore region eagerly look forward to this Annual Mega Home Buying festival which gives them the widest choice of homes from reputed Property Developers who are CREDAI members. There would be 100 + projects from over 25 developers for visitors to choose from. State Bank of India is the title partner for the event and they would have a huge pavilion at the venue.

Leading banks & institutions like South Indian Bank, Bank of Baroda, HDFC Bank and LIC Housing Finance are the Banking Partners and will have stalls at the fair. This would enable prospective home buyers to understand their eligibility for Home Loans and to get spot sanctions with attractive offers.

Surender Vittel, Chairman of FAIRPRO 2025 pointed out that an array of apartments, villas, Senior Living, Plots and gated communities are on display. There is a wide range of properties on offer ranging from Rs 20 lakh to upwards of Rs 7 crore. Developers have come up with Special offers exclusively for the Fair which would benefit Home Buyers. The Knowledge partner JLL will be releasing a market survey report on Coimbatore's real estate at the fair. There would also be a panel discussion by experts which will enlighten the public on the various developments happening in the region and how today's investor can benefit by taking the right decision.

Sanjana Vijay Kumar, Secretary CREDAI Coimbatore stated that recently there has been a lot of development in the region. Coimbatore has been rising with a 52% increase in new home launches in the last year. The Office space market has shown tremendous interest with the launch of projects for 8.6 million sq.feet. There has been a high speed growth in infrastructure with Metro projects in pipeline, expansion of airports and the Western Bye pass Road taking off. All this has resulted in people from various parts of the country showing greater interest in real estate in Coimbatore. Karthik Kumar, Treasurer Credai & Arun SL, DGM State Bank of India explained the various salient features of the Fair. The fair will be open to the public from 10am to 8pm. Suryadev Alloys & Power, Watertec India, Eagle Industries, Approval Guru and Adani Cement are the Corporate partners. Entry is free.

# கோவையில் கிரெடாய் சார்பில் 'ஃபேர் புரோ 2025' கண்காட்சி

## ஆகஸ்ட் 8-இல் தொடக்கம்




ரியல் எஸ்டேட் கண்காட்சி குறித்த விளம்பரத்தை வெளியிடும் கிரெடாய் அமைப்பின் நிர்வாகிகள்.

**கோவை, ஆக. 5:** கோவையில் கிரெடாய் சார்பில் 'ஃபேர் புரோ 2025' ரியல் எஸ்டேட் கண்காட்சி வரும் 8-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது.

இது குறித்து கிரெடாய் அமைப்பின் தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த்குமார், செயலர் சஞ்சனா, கண்காட்சித் தலைவர் சுரேந்தர் விட்டல், பொருளாளர் கார்த்திக்குமார் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியது:

தனியார் ரியல் எஸ்டேட் கூட்டமைப்பான கிரெடாய் சார்பில் ஆண்டுதோறும் ஃபேர் புரோ என்ற பெயரில் ரியல் எஸ்டேட் திருவிழா நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு ஆகஸ்ட் 8, 9, 10 ஆகிய மூன்று நாள்கள் கோவை கொடிசியா இ அரங்கில் நடைபெறுகிறது. இதில், 25-க்கும் மேற்பட்ட முன்னணி ரியல் எஸ்டேட் டெவலப்பர்கள் பங்கேற்று 100-க்கும் மேற்பட்ட கட்டுமானத் திட்டங்களை காட்சிக்கு வைக்க இருக்கின்றனர்.

மேலும், கண்காட்சியில் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, சௌத் இந்தியன் வங்கி, பாங்க் ஆஃப் பரோடா, ஹெச்.டி.எப்.சி. உள்ளிட்ட வங்கிகள் வீட்டுக்கடன் வசதி வழங்க உள்ளனர். கண்காட்சியில், அடுக்குமாடி குடியிருப்புகள், வில்லாக்கள், சீனியர் லிவிங் யூனிட்கள், பிளாட்டுகள், கேடட் கம்யூனிட்டிகள் உள்ளிட்ட ரூ.20 லட்சம் முதல் ரூ.7 கோடி வரையிலான விலைகளில் சொத்துகள் விற்பனை குறித்து விளக்கப்படுகிறது.

இதையொட்டி ஜெ.எல்.எல். நிறுவனம், கோவை ரியல் எஸ்டேட் சந்தை தொடர்பான ஆய்வு அறிக்கையை வெளியிடுகிறது. இதைத் தொடர்ந்து, முதலீட்டு வாய்ப்புகள், நகர வளர்ச்சி குறித்து நிபுணர்களின் கலந்துரையாடலும் நடைபெறுகிறது. இந்த கண்காட்சி தினசரி காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும் என்றும் பொதுமக்களுக்கு அனுமதி இலவசம் என்றும் தெரிவித்தனர்.




# ஹிந்து பண்பாட்டுக் கருத்துகள் சொல்லும் திருக்குறள்

திருக்குறள் உலகம் முழுமையும் சென்று தமிழ ளின் பெருமையை பறை சாற்றிக் கொண்டிருக்கிற நூல். 2000 ஆண்டுகள் ஆகியும் கூட காலத்தால் வெல்ல முடியாத ஓர் அரிய இலக்கியம். திருக்குற ளின் வெற்றியைப் பார்த்த பலரும் அதற்கு சொந்தம் கொண்டாடுகின்றனர். குறிப்பாக திருக்குறள் ஒரு கிறிஸ்தவ இலக்கியம் என்று நிரூபிக்க பல்வேறு முயற்சிகள் நடந்து வருகிறது. ஆனால் திருக்கு றளை முழுமையாக படித்தவர்கள், புரிந்து கொண் டவர்கள், அது ஒரு ஹிந்து இலக்கியம் தான் என்ப தில் ஐயம் கொள்ள மாட்டார்கள்.

சிந்தனைக்களம்



-ராம ஸ்ரீனிவாசன்
பா.ஜ., மாநில பொதுச் செயலாளர்

## யார் ஹிந்து

## ஹிந்துக்களுக்கு அபாயம்

## திருக்குறளில் திரிபுவாதம்

## 'தினமலர்' நிறுவனருக்கு தலைவர்கள் புகழஞ்சலி

சென்னை, ஜூலை 22-

# தமிழக புதிய டி.ஜி.பி., யார்? மத்திய அரசுக்கு பட்டியல்

சென்னை, ஜூலை 22-



சந்தீப்ராய் ரத்தோர்



சீமா அகர்வால்

## அரசு தலைமை செயலர்கள் மீதான அவமதிப்பு வழக்கு முடித்து வைப்பு

சென்னை, ஜூலை 22-

# தி.மு.க.,வின் 'ஓரணியில் தமிழ்நாடு': மக்களுக்கு ஓ.டி.பி., அனுப்ப தடை

மதுரை, ஜூலை 22-



ஆம்புலன்ஸ், தீயணைப்பு வண்டிக்கு வழிவிடுங்கள்






# Property expo, Fairpro, to be held from August 8 to 10

**The Hindu Bureau**
COIMBATORE

The Confederation of Real Estate Developers Associations of India (CREDAI), Coimbatore, will organise the 15th edition of property expo, Fairpro, in Coimbatore from August 8 to 10.

S.R. Arvind Kumar, president of CREDAI Coimbatore, Surender Vittel, chairman of Fairpro 2025, and Sanjana Vijay Kumar, secretary of CREDAI Coimbatore, told the media on Monday that the event would have 30 participants who would display details of more than 100 projects, including villas, plots, and holiday plots. Nearly five bankers and raw material suppliers would also participate in the fair.

"There are a lot of new projects launched in the recent months. Fairpro will give the customers the best of these," said Mr. Vittel. It would be a festival for home buyers, he said.

According to Ms. Vijay Kumar, the event this year also has a panel discussion on August 9 and JLL India, which is the knowledge partner, will release a white paper on the real estate sector in Coimbatore. There were multiple developments happening in and around Coimbatore and the white paper would give details related to these developments, she said.

The event, which will be held at the CODISSIA Trade Fair Complex from 10 a.m. to 8 p.m., is expected to attract nearly 10,000 visitors. Mr. Arvind Kumar added that Coimbatore was adding six million sq.ft of IT space that would generate almost 20 lakh jobs. The demand for houses would be proportionate to this, he said.

According to the event organisers, the demand for houses is currently more than the supply and inventory of ready-to-occupy houses is almost nil.




➤ கோவையில் நேற்று நடந்த கிரெடாய் ஃபேர் புரோ 2025 கண்காட்சி குறித்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற கிரெடாய் நிர்வாகிகள்.

# கிரெடாய் 'ஃபேர் புரோ' கண்காட்சி கோவையில் ஆகஸ்ட் 8-ம் தேதி தொடக்கம்

■ கோவை

கட்டுமான தொழில் அமைப்பான 'கிரெடாய்' கோவை சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் 'ஃபேர் புரோ' கண்காட்சி 2025 அவிநாசி சாலையில் உள்ள கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில் ஆகஸ்ட் 8-ம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து கிரெடாய் கோவை தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த் குமார் கூறியதாவது:

கோவையில் சொந்த வீடுகள் வாங்க விரும்பும் மக்களுக்கு 'ஃபேர் புரோ' கண்காட்சி மிகவும் உதவும். 25-க்கும் மேற்பட்ட முன்னணி டெவலப்பர்கள் பங்கேற்கின்றனர். 100-க்கும் மேற்பட்ட கட்டுமான திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. கண்காட்சியில் டெவலப்பர்கள் தவிர ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, சவுத் இந்தியன் வங்கி, பாங்க் ஆஃப் பரோடா, எச்டிஎப்சி வங்கி, எல்ஐசி ஹவுசிங் பைனான்ஸ் போன்ற முன்னணி நிறுவனங்களும் கலந்து கொள்கின்றன. கண்காட்சியின் பிரதான பங்குதாரர் வங்கியாக எஸ்பிஐ வங்கி செயல்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

'ஃபேர் புரோ' கண்காட்சி தலைவர் சுரேந்தர விட்டல் கூறும் போது, "பல்வேறு கட்டுமான திட்டங்கள் ரூ.20 லட்சம் முதல் ரூ.7 கோடி வரை பல்வேறு விலைகளில் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட உள்ளன. கண்காட்சியை முன்னிட்டு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்," என்றார்.

கண்காட்சியின் ஒரு பகுதியாக, ஜெ.எல்.எல். நிறுவனம், கோவை ரியல் எஸ்டேட் சந்தை தொடர்பான ஆய்வு அறிக்கையை வெளியிடவுள்ளது. அதை தொடர்ந்து, முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் நகர வளர்ச்சி குறித்து நிபுணர்களின் கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'கிரெடாய்' கோவை செயலாளர் சஞ்சனா விஜய்குமார், பொருளாளர் கார்த்திக் குமார், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா உதவி பொது மெலாளர் (வீட்டுக் கடன் பிரிவு) கோவை வடக்கு பிரவீன் ஆகியோர் பேசினர். கண்காட்சி காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற உள்ளது.

## கொடிசியா வளாகத்தில்

# கிரெடாய் சார்பில் 'பேர் புரோ' கண்காட்சி

### 8ம் தேதி முதல் 10ம் தேதி வரை நடக்கிறது




கோவை, ஆக. 5: கோவை கிரெடாய் அமைப்பின் சார்பில் கட்டுமான திட்டம் தொடர்பான 'பேர் புரோ' கண்காட்சி கொடிசியா இ வளாகத்தில் வருகிற 8ம் தேதி தொடங்கி 10ம் தேதி வரை நடக்கிறது.

இது குறித்து கிரெடாய் கோவை அமைப்பின் தலைவர் அரவிந்த் குமார் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: கோவையில் சொந்த வீடுகள் வாங்க விரும்பும் மக்களுக்கு இந்த எக்ஸ்போ சிறந்த வாய்ப்பாக அமையும். இதில் 25-க்கும் மேற்பட்ட முன்னணி டெவலப்பர்கள் பங்கேற்கின்றனர். 100-க்கும் மேற்பட்ட கட்டுமானத் திட்டங்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. மேலும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சவுத் இந்தியன் வங்கி, பாங்க் ஆப் பரோடா, எச்.டி.எப்.சி வங்கி, எல்.ஐ.சி ஹவுசிங் பைனான்ஸ் போன்ற முன்னணி வங்கிகள் பங்கேற்கின்றன. இந்த வங்கிகள் மக்களுக்கு தேவையான வீட்டு வசதி கடனை வழங்க உள்ளன. அடுக்குமாடி குடியிருப்புகள், வில்லாக்கள், சீனியர் லிவிங் யூனிட்கள், பிளாட்கள் மற்றும் கேட்டட் கம்யூனிட்டிகள் உள்ளிட்ட சொத்துகள் இங்கு காட்சிக்கு வைக்கப்படுகின்றன. ரூ. 20 லட்சம் முதல் ரூ. 7 கோடி வரையிலான விலைகளில் காட்சிப்படுத்தப்பட உள்ளன. காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும் கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இவ்வாறு அவர் கூறினார். உடன் பேர் புரோ-2025 கண்காட்சி தலைவர் சுரேந்தர் விட்டல், செயலாளர் சஞ்சனா ஆகியோர் இருந்தனர்.

# கிரெடாய் சார்பில் கோவையில் 'பேர் புரோ-2025' கண்காட்சி




■ இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளை சார்பில், நடைபெற உள்ள 'பேர் புரோ' கண்காட்சி தொடர்பான அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. (இடமிருந்து) எஸ்.பி.ஐ., துணை பொது மேலாளர் பிரவீன், 'பேர் புரோ' தலைவர் சுரேந்தர் விட்டல், 'கிரெடாய்' தலைவர் அரவிந்த்குமார், செயலாளர் சஞ்சனாகுமார், பொருளாளர் கார்த்திக் குமார்.

**கோவை, ஆக. 5–**

கோவை 'கிரெடாய்' சார்பில், 'பேர் புரோ–2025' கண்காட்சி, 8 முதல், 10ம் தேதி வரை காலை, 10:00 முதல் இரவு, 8:00 மணி வரை, கொடிசியா 'இ' ஹாலில் நடக்கிறது. 30க்கும் மேற்பட்ட முன்னணி டெவலப்பர்களின் ஸ்டால்கள் இடம் பெறுகின்றன.

இது குறித்து, இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளை தலைவர் அரவிந்த் குமார், 'பேர் புரோ' தலைவர் சுரேந்தர் விட்டல் ஆகியோர், நிருபர்களிடம் நேற்று கூறியதாவது:

கணகாட்சியில், எஸ்.பி.ஐ., உள்ளிட்ட முன்னணி வங்கிகள் பங்கேற்கின்றன. பட்ஜெட்டில் வீடு கட்டுவோர், வாங்குவோர், வங்கிக்கடன் பெறுவது உள்ளிட்ட தகவல்களை அறிந்து கொள்ளலாம். கட்டுமானம் சார்ந்து தனித்துவம் மிக்க திட்டங்களும், காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

கடந்தாண்டு, 7,500 பேர் பங்கேற்றனர்; இந்தாண்டு, 10 ஆயிரம் பேர் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

கோவையில் கட்டுமான தொழில் தொழில் வளர்ச்சியடைந்து வருகிறது. ஐ.டி., நிறுவனங்கள் புதிதாக வரவுள்ளன.

வீடு வாங்குவோருக்கு இக்கண்காட்சி ஓர் விழாவாக அமையும்; பார்வையாளர்களுக்கு அனுமதி இலவசம்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.




கிரெடாய் சார்பில் நடைபெறும் 'பேர் புரோ' கண்காட்சிக்கான லோகோவை கிரெடாய் தலைவர் அரவிந்த்குமார் மற்றும் கண்காட்சி தலைவர் சுரேந்தர் விட்டல் ஆகியோர் வெளியிட்ட போது எடுத்த படம்.

### கோவை கிரெடாய் சார்பில்

# கொடிசியாவில் வீடு விற்பனை கண்காட்சி

## 8-ந் தேதி தொடங்குகிறது

கோவை, ஆக.5-

கோவை கொடிசியாவில், வீடு வாங்குபவர்களுக்கான கண்காட்சி வருகிற 8-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை 3 நாட்கள் நடைபெறுகிறது. இதில் 25-க்கும் மேற்பட்ட முன்னணி கட்டுமான நிறுவனங்கள் பங்கேற்கின்றன. கண்காட்சிக்கான ஏற்பாடுகளை கோவை கிரெடாய் அமைப்பு செய்துள்ளது. இது குறித்து கோவை கிரெடாய் அமைப்பின் தலைவர் எஸ்.ஆர்.அரவிந்த்குமார் நிருபர்களிடம் கூறியதாவது:-

'பேர் புரோ-2025' என்ற புராபர்ட்டி எக்ஸ்போ கோவையில் 3 நாட்கள் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடக்கிறது. கோவையில் சொந்த வீடுகள் வாங்க விரும்பும் மக்களுக்கு இந்த கண்காட்சி வாய்ப்பாக அமையும். இதில் 100-க்கும் மேற்பட்ட கட்டுமான திட்டங்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. கண்காட்சியில் முன்னணி வங்கிகள் கலந்து கொண்டு தேவையான வீட்டுவசதி கடனை வழங்க உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

கண்காட்சி தலைவர் சுரேந்தர் விட்டல் கூறும்போது, அடுக்குமாடி வீடுகள், தனி வீடுகள், வீட்டுமனைகள் உள்ளிட்ட அனைத்துவகையான சொத்துகளின் மாதிரிகள் கண்காட்சிக்கு வைக்கப்படுகின்றன. ரூ.20 லட்சம் முதல் ரூ.7 கோடி வரையிலான வீடுகள் விற்பனைக்காக காட்சிப் படுத்தப்பட உள்ளன என்றார். கிரெடாய் கோவை செயலாளர் சஞ்சனா விஜய்குமார் கூறுகையில், கடந்த ஆண்டு கோவையில் புதிய வீட்டு திட்டங்கள் 55 சதவீதம் அதிகரித்துள்ளன. கோவை நகரம் வளர்ச்சியை நோக்கி செல்வதால் வீடுகளுக்கான தேவையும் அதிகரித்து வருகிறது என்றார். இந்த நிகழ்ச்சியில் கண்காட்சிக்கான லோகோவும் வெளியிடப்பட்டது. இந்த கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

அப்போது, கிரெடாய் பொருளாளர் கார்த்திக் குமார், பாரத் ஸ்டேட் வங்கி வீட்டு கடன் பிரிவு உதவி பொதுமேலாளர் பிரவீன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# Landmark projects to come up in city: Corpn. Commissioner

**The Hindu Bureau**
COIMBATORE

Coimbatore is set to receive several landmark projects, including the Semmozhi Poonga, a ₹300-crore library, and stadiums for cricket and hockey, said Coimbatore Municipal Corporation Commissioner M. Sivaguru Prabakaran.

At an event organised recently in the city, the Commissioner remarked that in terms of growth and infrastructure development, Coimbatore was almost on a par with Chennai.

He installed the new office bearers of Confederation of Real Estate Developers Associations of India (CREDAI) Coimbatore: S. R. Arvind Kumar, Managing Director of Arima Constructions, as the president, Rajiv Ramaswamy, Joint Managing Director of Sreevatsa Real Estates, as the vice president, and Sanjana Vijayakumar, Managing Partner of TNCD LLP, as the secretary, for 2025-2027.

**The Commissioner remarked that in terms of growth and infrastructure, Coimbatore was almost on a par with Chennai**

Mr. Arvind Kumar said some of the programmes of CREDAI Coimbatore in the coming months would be Fairpro, a property fair, CONNECT - a platform for connecting innovative building materials and service providers of the industry, and industry tours.

**Airport expansion**

Former CREDAI president, Gugan Ilango, said CREDAI Coimbatore had actively taken up with the authorities the need to expand Coimbatore airport and to improve other infrastructure facilities.

Mr. Ilango, Managing Director of Gowtham Housing, has taken over as the president elect of CREDAI Tamil Nadu.




● கிரெடாய் கோவை கிளை புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு நிகழ்வில் பங்கேற்றோர்.

# 'அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கோவை முதன்மை நகரமாக மாறும்'

■ **கோவை**

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளை புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி கோவையில் நடந்தது.

புதிய தலைவராக அர்விந்த்குமார், துணைத் தலைவராக ராஜிவ் ராமசாமி, செயலாளராக சஞ்சனா விஜயக்குமார், இணை செயலாளராக மதன் பி.லுந்த், பொருளாளராக கார்த்திக்குமார் பொறுப்பேற்றனர். நிகழ்வில், கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் தலைமை வகித்து பேசும்போது, "சென்னைக்கு நிகராக கோவையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் முதன்மையான நகரமாக கோவை மாறும். கோவை நகரில் 200 கோடி ரூபாய் செலவில் சாலைகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன" என்றார். கிரெடாய் முன்னாள் தலைவர் குகன் இளங்கோ, செயலாளர் சஞ்சனா விஜயக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிரெடாய் அமைப்பின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு

**கோவை, ஏப். 20:** இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பின் (கிரெடாய்) கோவை கிளைக்கு புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

அமைப்பின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு விழா கோவையில் அண்மையில் நடைபெற்றது. அரிமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எஸ். ஆர்.அரவிந்த்குமார் அமைப்பின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றார்.

துணைத் தலைவராக ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குநர் ராஜீவ் ராமசாமியும், செயலராக டிஎன் சிடி எல்எல்பி நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் சஞ்சனா விஜயகுமாரும் பொறுப்பேற்றனர்.

ஸ்ரீவாரி இன்ப்ராஸ்ட்ரக்சர் நிர்வாக இயக்குநர் மதன் பி.லுண்ட் இணைச் செயலராகவும், அனன்யா ஷெல்டர்ஸ் செயல் இயக்குநர் கார்த்திக்குமார் பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.

விழாவில் மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுப் பேசினார்.

Vazhga Valamudan

THE COVAI MAIL

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

Postal Reg.No: CB/123/24-26.

www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL

Date : 21.4.2025

# Coimbatore has many landmark Projects

*– Corpn. Commissioner at CREDAI Investiture ceremony*




***(From left) Sanjana Vijaykumar, Secretary; Gugan Ilango, Immediate Past President; Chief Guest Sivaguru Prabhakaran, Corporation Commissioner, Coimbatore Corporation; Arvind Kumar, President; Rajiv Ramaswamy, Vice President; and (first right) Karthik Kumar, Treasurer.***

**The Covai Mail**

The Confederation of Real Estate Developers' Associations of India (CREDAI), Coimbatore, recently held its investiture ceremony for the office bearers for the 2025–2027 term at Taj Vivanta, Coimbatore.

On the occasion, the chief guest, Sivaguru Prabakaran, Corporation Commissioner, Coimbatore Municipal, gave the badges to the newly elected office-bearers.

Arvind Kumar, Managing Director of Arima Constructions P. Ltd, elected as the President; Rajiv Ramaswamy, Joint Managing Director of Sreevatsa Real Estates P. Ltd, as the Vice President; Sanjana Viayakumar, Managing Partner, TNCD LLP, as the Secretary; Madan B. Lund, Director, Srivari Infrastructure P. Ltd, as the Joint Secretary and Karthik Kumar, Executive Director of Ananya Shelters P. Ltd, as the Treasurer.

At the installation, Prabakaran, said, "Coimbatore has got many landmark projects, such as the Semmozhi Poonga, a library to be set up for Rs. 300-crore, a cricket stadium and a hockey stadium, thanks to the Chief Minister M. K. Stalin and the Municipal Administration and Water Supply Department.

The Commissioner said that in terms of growth and infrastructure development, Coimbatore was becoming almost equal to Chennai. With the kind of projects lined up, Coimbatore has the potential to emerge as the number one city in Tamil Nadu in the next 5 years.

The fast-paced infrastructure development projects, such as the 300 million-per-day capacity Pilloor III Water Scheme, which could be augmented to 400 mld, besides Rs. 200-crore road projects, the underground drainage system and so on, would enhance the status of the city further, he added.

**"In terms of growth and infrastructure development, Coimbatore has the potential to emerge as the number one city in Tamil Nadu in the next 5 years**



http://www.maalaimalar.com
Regd. No. CB/026/2024-2026 RNI. No. 30446/77

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

கோவை 21-4-2025 (திங்கட்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★★★ | மலர் 48 இதழ் 127

COIMBATORE 21-4-2025 (MONDAY) 8 PAGES ₹ 5 | VOL: 48 ISSUE: 127




கோவை கிரெடாய் கிளை புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற நிர்வாகிகளை படத்தில் காணலாம்.

## கிரெடாய் கோவை கிளை

# புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா

கோவை, ஏப்.21–

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா, கோவை ரேஸ்கோர்ஸ் தாஜ் விவாந்தா ஓட்டலில் நடைபெற்றது. இதில் அரிமா கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவன நிர்வாக இயக்குனர் எஸ். ஆர்.அர்விந்த்குமார் தலைவராகவும், ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட் இணை நிர்வாக இயக்குனர் ராஜீவ் ராமசாமி துணைத்தலைவராகவும், டி.என்.சி.டி. எல்.எல்.பி. நிறுவன நிர்வாக பங்குதாரர் சனஜா விஜயக்குமார் செயலாளராகவும், ஸ்ரீவாரி இன்பிராஸ்ட்ரக்சர் நிர்வாக இயக்குனர் மதன் பி. லுந்த் இணை செயலாளராகவும், அனன்யா ஷெல்டர்ஸ் நிறுவன செயல் இயக்குனர் கார்த்திக்குமார் பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். கிரெடாய் கோவை கிளையின் புதிய தலைவர் அர்விந்த்குமார் பேசுகையில், கிரெடாய் கோவையின் நலனுக்காக பேர்புரோ கண்காட்சியை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. ஆண்டுக்கு ஒரு முறை கனெக்ட் என்ற புதுமையான கட்டுமான பொருட்களை அறிமுகம் செய்து வருகிறது. இவை தவிர நிறுவனங்களுக்கு இடையேயான விளையாட்டு போட்டிகள், வணிக சந்திப்புகள், சுற்றுலாக்களையும் நடத்தி வருகிறது என்றார்.

# கோவையில் பல முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன - கமிஷனர் குரு பிரபாகரன் தகவல்

**கோவை, ஏப்.21-**

கோயம்புத்தூர், ஏப்ரல் 20, 2025 – கோவையை அடையாளம் காட்டும் வகையில் 300 கோடியில் அமைக்கப்படும் செம்மொழி பூங்கா, நூலகம், கிரிக்கெட், ஹாக்கி மைதானங்கள் உள்ளிட்ட பல திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. தமிழக முதல்வர் ஸ்டாலின், நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், என, கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் தெரிவித்தார்.

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி கோவை ரேஸ்கோர்ஸ்சில் உள்ள தாஜ் விவாந்தா ஹோட்டலில் சனிக்கிழமை 19.4.2025 அன்று நடந்தது.கிரெடாய் கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழாவில் கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் பங்கேற்று பேசினார். அப்போது அவர், சென்னைக்கு நிகராக கோவையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் முதன்மையான நகரமாக கோவை நகரம் மாறும். தினமும் 300 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கி வரும் பில்லூர் குடிநீர் திட்டத்தில், 400 மில்லியன் லிட்டராக உயர்த்த முடியும். கோவை நகரில் 200 கோடி ரூபாய் செலவில் ரோடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பாதாள சாக்கடை திட்டமும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இவை கோவை நகரின் தரத்தை மேலும் உயர்த்தும், என்றார்.

மேலும் அவர் பேசுகையில், அவிநாசி ரோடு மேம்பால திட்டம் விரைவில் முடிவு பெறும். மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கும். கோவையில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக அரசு கோடிக்கணக்கில் முதலீடுகளை செய்து வருகிறது. திருநெல்வேலியில் நான்




பணியாற்றியபோது, கிரெடாய் உடன் தொடர்பு ஏற்பட்டது. இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டபோதெல்லாம் இந்த அமைப்பு உதவி வருகிறது. அதேபோன்ற அமைப்பு கோவையில் செயல்பட்டு வருகிறது. தனியார் பொதுத்துறை பங்களிப்புக்கு முன் உதாரணமாக திகழ்ந்து வருகிறது, என்றார்.புதியதாக பொறுப்பேற்ற கிரெடாய் கோவை கிளையின் தலைவர் அர்விந்த்குமார் பேசுகையில், கிரெடாய் என்றாலே, நம்பகமானது, மதிப்புமிக்கது; நிலையானது. ஏற்கனவே நிர்வகித்து வந்த அணியினர், சிறப்பாக பணியாற்றியுள்ளனர். புதிய நிர்வாகிகளும் அதை பின்தொடர்ந்து சிறப்பாக பணியாற்றுவர், என்றார்.

கிரெடாய் அமைப்பின் அடுத்த திட்டங்கள் குறித்து, பேசுகையில், கிரெடாய் கோவையின் நலனுக்காக பேர்புரோ கண்காட்சியை அனைவரும் எதிர்பார்க்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. ஆண்டுக்கு ஒரு முறை கனெக்ட் என்ற புதுமையான கட்டுமான பொருட்களை அறிமுகம் செய்து வருகிறது. இவை தவிர நிறுவனங்களுக்கு இடையேயான விளையாட்டு போட்டிகள், வணிக சந்திப்புகள், சுற்றுலாக்களையும் நடத்தி வருகிறது. கோவை மாஸ்டர் பிளான் திட்டத்துக்குசரியான தீர்வுகளை வழங்கவும், கோவை நகர மேம்பாட்டுக்கு ஏற்பட்டு வரும் பிரச்னைகளுக்கும், கட்டுமான தொழில்துறைக்கு உள்ள சவால்களையும் எதிர்கொண்டு செயல்பட்டு வருகிறது உடனடி முன்னாள் தலைவர் குகன் இளங்கோ பேசுகையில், இந்த நான்கு ஆண்டுகளில் பொறுப்பில் இருந்தபோது நிறைய கற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்தன. கோவையின் விரிவாக்கத்துக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், விமான நிலைய விரிவாக்கம் உள்ளிட்ட பிற வசதிகளையும் அரசு ஏற்படுத்தி தர வேண்டும். இது குறித்த பல்வேறு ஆலோசனைகளையும், முக்கியத்துவத்தையும் அதிகாரிகளுக்கு கிரெடாய் எடுத்துச் சென்றுள்ளது. மக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும், என்றார்.

செயலாளர் சஞ்சனா விஜயக்குமார் நன்றி தெரிவித்து பேசுகையில், கிரெடாய் உடன், மதுரை, சேலம், ஒசூர், மற்றும் திருநெல்வேலி கிளைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம், என்றார்.இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்வு, பொறுப்பேற்கும் நிகழ்ச்சி கோவை ரேஸ்கோர்ஸ்சில் உள்ள தாஜ் விவாந்தா ஹோட்டலில் சனிக்கிழமை 19.4.2025 அன்று நடந்தது.

அரிமா கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ்.ஆர் அர்விந்த்குமார் தலைவராக பொறுப்பேற்றார்.ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட் பி லிமிடெட் இணை நிர்வாக இயக்குனர் ராஜிவ் ராமசாமி புதிய துணைத்தலைவராகவும், டிஎன்சிடி எல்எல்பி நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் சனஜா விஜயக்குமார் புதிய செயலாளராகவும் பொறுப்பேற்றனர். ஸ்ரீவாரி இன்பிராஸ்ட்ரக்சர் பி லிமிடெட் நிர்வாக இயக்குனர் மதன் பி லுந்த் இணை செயலாளராகவும், அனன்யா ஷெல்டர்ஸ் பி லிமிடெட் நிறுவனத்தின் செயல் இயக்குனர் கார்த்திக் குமார் புதிய பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.




# CREDAI new team installed by Corporation Commissioner

**Coimbatore, April 21:** A new team of office-bearers were installed at an event organised by CREDAI Coimbatore held at a private hotel on Race Course road in the city. Corporation Commissioner Sivaguru Prabhakaran who was the chief guest installed S R Arvind Kumar as president (Managing Director of Arima Constructions P. Ltd) and others.

In his address, the corporation top honcho said that Coimbatore is gifted with many landmark projects like Semmozhi Poonga, a library to be set up at a cost of Rs. 300-crore, a cricket stadium and a hockey stadium and added that this was possible due to the efforts of Chief Minister M. K. Stalin and the Minister for Municipal Administration and Water Supply Department.

Elaborating further, he said that Coimbatore is developing at a faster pace on par with Chennai as far as growth and infrastructure is concerned. With projects lined up, Coimbatore had the potential to emerge as the number one city in Tamil Nadu in the next 5 years. The fast-paced infrastructure development projects such as the 300 million-per-day capacity Pilloor III Water Scheme, which could be augmented to 400 mld, besides Rs. 200 - crore road projects, the underground drainage system and so on would enhance the status of the city further.

The Avinashi Road flyover project was nearing completion, and metro rail project was in the offing. The State government had been investing crores of rupees on various developmental works in Coimbatore. The Commissioner recalled his close association with CREDAI during natural disasters and added that this is continuing even now to showcase public-private cooperation.

Others who took oath of office included Rajiv Ramaswamy - vice-president (Joint Managing Director of Sreevatsa Real Estates P. Ltd), Sanjana Viayakumar - Secretary (Managing Partner, TNCD LLP), Madan B. Lund - Joint Secretary (Director, Srivari Infrastructure P. Ltd) and P. Karthik Kumar - Treasurer (Executive Director of Ananya Shelters P. Ltd).

Speaking on the road map ahead, he spoke of upcoming initiatives of CREDAI Coimbatore such as FAIRPRO - the most anticipated annual property exhibition, CONNECT - a platform for connecting innovative building materials and service providers of the industry, Corporate Sports Meet, and conducting industry tours and industrial visits. CREDAI would endeavour to find the right solutions for Coimbatore Master Plan, Coimbatore Urban Development Authority and various issues facing the Construction industry.

Immediate past president Gugan Ilango said that the four years he was holding the responsibility was a learning curve for him. CREDAI Coimbatore had been actively taking up with the authorities the need for Coimbatore airport expansion and enhancing other infrastructure facilities. It has made many significant policy representations to the authorities, which were accepted by the Government resulting in benefits to the public. Secretary Sanjana Vijayakumar proposed a vote of thanks.




# கோவை மாஸ்டர் பிளான் திட்டத்துக்கு சரியான தீர்வுகளை வழங்கும் கிரெடாய்

## புதிய தலைவர் அர்விந்த்குமார் பேச்சு

**கோவை, ஏப். 21–**

கோவையை அடையாளம் காட்டும் வகையில் 300 கோடியில் அமைக்கப்படும் செம்மொழி பூங்கா, நூலகம், கிரிக்கெட், ஹாக்கி மைதானங்கள் உள்ளிட்ட பல திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன.

இதற்காக தமிழக முதல்வர் ஸ்டாலின், நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என, கோவை மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் தெரிவித்தார்.

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி கோவை ரேஸ்கோர்ஸில் உள்ள தாஜ் விவாந்தா ஓட்டலில் கடந்த 19ந் தேதி சனிக்கிழமை நடந்தது.

### கோவையின் தரத்தை உயர்த்தும் திட்டங்கள்

கிரெடாய் கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழாவில் கோவை மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் பங்கேற்று பேசினார்.

அப்போது அவர், சென்னைக்கு நிகராக கோவையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் முதன்மையான நகரமாக கோவை நகரம் மாறும்.

தினமும் 300 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கி வரும் பில்லூர் குடிநீர் திட்டத்தில், 400 மில்லியன் லிட்டராக உயர்த்த முடியும். கோவை நகரில் 200 கோடி ரூபாய் செலவில் ரோடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பாதாள சாக்கடை திட்டமும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இவை கோவை நகரின் தரத்தை மேலும் உயர்த்தும், என்றார்.

மேலும் அவர் பேசுகையில், அவிநாசி ரோடு மேம்பால திட்டம் விரைவில் முடிவு பெறும். மெட்ரோ ரெயில் திட்டம் தொடங்கும். கோவையில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக அரசு கோடிக்கணக்கில் முதலீடுகளை செய்து வருகிறது.

திருநெல்வேலியில் நான் பணியாற்றியபோது, கிரெடாய் உடன் தொடர்பு ஏற்பட்டது. இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டபோதெல்லாம் இந்த அமைப்பு உதவி வருகிறது. அதேபோன்ற அமைப்பு கோவையில் செயல்பட்டு வருகிறது. தனியார் பொதுத்துறை பங்களிப்புக்கு முன் உதாரணமாக திகழ்ந்து வருகிறது, என்றார்.

### பேர்புரோ கண்காட்சி

புதியதாக பொறுப்பேற்ற கிரெடாய் கோவை கிளையின் தலைவர் அர்விந்த்குமார் பேசுகையில், கிரெடாய் என்றலே, நம்பகமானது, மதிப்புமிக்கது; நிலையானது. ஏற்கனவே நிர்வகித்து வந்த அணியினர், சிறப்பாக பணியாற்றியுள்ளனர். புதிய நிர்வாகிகளும் அதை பின்தொடர்ந்து சிறப்பாக பணியாற்றுவர், என்றார்.

கிரெடாய் அமைப்பின் அடுத்த திட்டங்கள் குறித்து, பேசுகையில், கிரெடாய் கோவையின் நலனுக்காக பேர்புரோ கண்காட்சியை அனைவரும் எதிர்பார்க்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. ஆண்டுக்கு ஒரு முறை கனெக்ட் என்ற புதுமையான கட்டுமான பொருட்களை அறிமுகம் செய்து வருகிறது. இவை தவிர நிறுவனங்களுக்கு இடையேயான விளையாட்டு போட்டிகள், வணிக சந்திப்புகள், சுற்றுலாக்களையும் நடத்தி வருகிறது.

கோவை மாஸ்டர் பிளான் திட்டத்துக்கு சரியான தீர்வுகளை வழங்கவும், கோவை நகர மேம்பாட்டுக்கு ஏற்பட்டு வரும் பிரச்னைகளுக்கும், கட்டுமான தொழில்துறைக்கு உள்ள சவால்களையும் எதிர்கொண்டு செயல்பட்டு வருகிறது.

### மக்கள் நல திட்டங்களில் கிரெடாய்

உடனடி முன்னாள் தலைவர் குகன் இளங்கோ பேசுகையில், இந்த நான்கு ஆண்டுகளில் பொறுப்பில் இருந்தபோது நிறைய கற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்தன. கோவையின் விரிவாக்கத்துக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், விமான நிலைய விரிவாக்கம் உள்ளிட்ட பிற வசதிகளையும் அரசு ஏற்படுத்தி தர வேண்டும். இது குறித்த பல்வேறு ஆலோசனைகளையும், முக்கியத்துவத்தையும் அதிகாரிகளுக்கு கிரெடாய் எடுத்துச் சென்றுள்ளது. மக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும், என்றார்.

### புதிய தலைவராக...

செயலாளர் சஞ்சனா விஜயக்குமார் நன்றி தெரிவித்து பேசுகையில், கிரெடாய் உடன், மதுரை, சேலம், ஒசூர், மற்றும் திருநெல்வேலி கிளைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம், என்றார்.

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்வு, பொறுப்பேற்கும் நிகழ்ச்சி கோவை ரேஸ்கோர்ஸில் உள்ள தாஜ் விவாந்தா ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை நடந்தது. அரிமா கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ்.ஆர். அர்விந்த்குமார் தலைவராக பொறுப்பேற்றார்.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட் இணை நிர்வாக இயக்குனர் ராஜீவ் ராமசாமி புதிய துணைத்தலைவராகவும், டிஎன்சிடி எல்எல்பி நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் சஞ்சனா விஜயக்குமார் புதிய செயலாளராகவும் பொறுப்பேற்றனர்.

ஸ்ரீவாரி இன்பிராஸ்ட்ரக்சர் நிர்வாக இயக்குனர் மதன் பி லுந்த் இணை செயலாளராகவும், அனன்யா ஷெல்டர்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குனர் கார்த்திக் குமார் புதிய பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.

# 'கிரெடாய்' அமைப்பு நிர்வாகிகள் பொறுப்பேற்பு




■ கிரெடாய் கோவை புதிய நிர்வாகிகள் தேர்வு, பதவியேற்பு நடந்தது. நிகழ்வில் பங்கேற்ற, (இடமிருந்து) நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சித்தார்த், சோமசுந்தரம், செயலாளர் சஞ்சனா, முன்னாள் தலைவர் குகன் இளங்கோ, மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன், கிரெடாய் தலைவர் அரவிந்த் குமார், துணைத்தலைவர் ராஜிவ் ராமசாமி, நிர்வாக குழு உறுப்பினர் அபிஷேக், பொருளாளர் கார்த்திக் குமார் ஆகியோர்.

**கோவை, ஏப். 23–**

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. இதில், 'அரிமா கன்ஸ்ட்ரக்சன்ஸ்' நிறுவன நிர்வாக இயக்குநர் அரவிந்த்குமார் தலைவராக பொறுப்பேற்றார்.

துணை தலைவராக, ஸ்ரீ வத்ஸா ரியல் எஸ்டேட் இணை நிர்வாக இயக்குநர் ராஜிவ் ராமசாமி, செயலாளராக டி.என்.சி.டி. எல்.எல்.பி., நிறுவன நிர்வாக பங்குதாரர் சஞ்சனா விஜயகுமார், இணை செயலாளராக, ஸ்ரீவாரி இன்பிராஸ்ட்ரக்சர் நிறுவன நிர்வாக இயக்குனர் மதன் லுாக். பொருளாளராக அனன்யா ஷெல்டர்ஸ் நிறுவன செயல் இயக்குர் கார்த்திக் குமார் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பதவியேற்பு நிகழ்வில், மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் பேசுகையில், "சென்னைக்கு நிகராக, கோவையில் அடிப்படை கட்டமைப்பு மேம்படுத்தப்படுகிறது.

அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் முதன்மையான நகராக கோவை மாறும். 'கிரெடாய்', தனியார்–பொதுத்துறை பங்களிப்புக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது" என்றார்.

'கிரெடாய்' தலைவர் அரவிந்த்குமார் பேசுகையில், "கோவையின் நலனைக் கருத்தில் கொண்டு, 'கிரெடாய்' செயல்படுகிறது. கோவை மாஸ்டர் பிளான் திட்டத்துக்கு தீர்வுகளை வழங்கியும், கட்டுமானத் துறையின் சவால்களை சிறப்பாக எதிர்கொண்டும் வருகிறது," என்றார்.

செயலாளர் சஞ்சனா விஜயகுமார் பேசுகையில், "கோவை கிரெடாயுடன் மதுரை, சேலம், ஒசூர், நெல்லை கிளைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம்," என்றார்.

நிகழ்ச்சியில், முன்னாள் தலைவர் குகன் இளங்கோ, நிர்வாகிகள், உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# கிரெடாய் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு

**கோவை, ஏப். 23:** இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி, கோவை ரேஸ்கோர்சில் உள்ள தனியார் ஓட்டலில் நடந்தது. இதில், மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் பங்கேற்று பேசும்போது, 'கோவையில் ரூ.300 கோடியில் வளர்ச்சி திட்டம் நடக்கிறது. இது சென்னைக்கு நிகரான சிட்டியாக மாறும் என்றார்.




கிரெடாய் கோயம்புத்தூர் அமைப்பின் புதிய நிர்வாகிகளாக பதவி ஏற்றுக்கொண்டவர்களுடன் கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் உள்ளார்.

அரிமா கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ்.ஆர். அர்விந்த்குமார் தலைவராகவும், ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட் பி லிமிடெட் இணை நிர்வாக இயக்குனர் ராஜிவ் ராமசாமி புதிய துணைத்தலைவராகவும், டிஎன்சிடி எல் எல்பி நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் சனஜா விஜயக்குமார் புதிய செயலாளராகவும் பொறுப்பேற்றனர். ஸ்ரீவாரி இன்பிராஸ்ட்ரக்சர் பி லிமிடெட் நிர்வாக இயக்குனர் மதன் பி லுந்த் இணை செயலாளராகவும், அனன்யா ஷெல்டர்ஸ் பி லிமிடெட் நிறுவனத்தின் செயல் இயக்குனர் கார்த்திக்குமார் புதிய பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.




# 'கிரெடாய்' புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு

கோவை, ஏப்.22-

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி கோவை ரேஸ்கோர்ஸ்சில் உள்ள தனியார் ஓட்டலில் நடந்தது. அரிமா கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ்.ஆர்.அரவிந்த்குமார் தலைவராக பொறுப்பேற்றார். ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட் பி லிமிடெட் இணை நிர்வாக இயக்குனர் ராஜிவ் ராமசாமி புதிய துணைத்தலைவராகவும், டி.என்.சி.டி. எல்.எல்.பி. நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் சஞ்சனா விஜயக்குமார் புதிய செயலாளராகவும் பொறுப்பேற்றனர். மேலும் ஸ்ரீவாரி இன்பிராஸ்ட்ரக்சர் நிறுவன நிர்வாக இயக்குனர் மதன் பி லுந்த் இணை செயலாளராகவும், அனன்யா ஷெல்டர்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குனர் கார்த்திக்குமார் புதிய பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். விழாவில் கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

சென்னைக்கு நிகராக கோவையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்பட்டு வருகின்றன. அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் முதன்மையான நகரமாக கோவை நகரம் மாறும். விரைவில் அவினாசி ரோடு மேம்பால பணிகள் நிறைவு பெறும். மேலும் மெட்ரோ ரெயில் திட்டமும் தொடங்கப்படும். கோவையில் பல்வேறு மேம்பாட்டு பணிகளுக்காக அரசு கோடிக்கணக்கில் முதலீடுகளை செய்து வருகிறது. இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டபோதெல்லாம் கிரெடாய் அமைப்பு உதவி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். அதனைத் தொடர்ந்து புதிதாக பொறுப்பேற்ற கிரெடாய் கோவை கிளையின் தலைவர் அர்விந்த்குமார், முன்னாள் தலைவர் குகன் இளங்கோ ஆகியோர் பேசினர். முடிவில் செயலாளர் சஞ்சனா விஜயக்குமார் நன்றி தெரிவித்து பேசினார்.

# கிரெடாய் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு

கோவை, ஏப். 21–

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு சங்கங்களின் கூட்டமைப்பு (கிரெடாய்) கோவை கிளையின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி, கோவை ரேஸ்கோர்சில் உள்ள தனியார் ஓட்டலில் நடந்தது. இதில், மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் பங்கேற்று பேசும்போது, 'கோவையில் ரூ.300 கோடியில் வளர்ச்சி திட்டம் நடக்கிறது. இது சென்னைக்கு நிகரான சிட்டியாக மாறும் என்றார்.

அரிமா கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ்.ஆர். அர்விந்த்குமார் தலைவராகவும், ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட் பி லிமிடெட் இணை நிர்வாக இயக்குனர் ராஜிவ் ராமசாமி புதிய துணைத்தலைவராகவும், டிஎன்சிடி எல்எல்பி நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் சனஜா விஜயக்குமார் புதிய செயலாளராகவும் பொறுப்பேற்றனர்.

ஸ்ரீவாரி இன்பிராஸ்ட்ரக்சர் பி லிமிடெட் நிர்வாக இயக்குனர் மதன் பி லுந்த் இணை செயலாளராகவும், அனன்யா ஷெல்டர்ஸ் பி லிமிடெட் நிறுவனத்தின் செயல்இயக்குனர் கார்த்திக்குமார் புதிய பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.




கிரெடாய் கோயம்புத்தூர் அமைப்பின் புதிய நிர்வாகிகளாக பதவி ஏற்றுக்கொண்டவர்களுடன் கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் உள்ளார்.